ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2291/30 - 2022 අගෝස්තු මස 03 වැනි බදාදා - 2022.08.03
*2291/30 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 03 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சம்பளச் சபைகள் கட்டளைச்சட்டம்**

அறிவித்தல்

**பீடி உற்பத்தித் தொழில்**

*தொழில் அமைச்சர் அவர்களினால் (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 33 (1) (அ) ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 2015 ஆண்டு மே மாதம் 27 ஆம் திகதிய 1916/13 ஆம் இலக்க அதி விசேட அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையொன்றின் வாயிலாக எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தினால் தெழில் ஆணையாளர் நாயகம் பீ. கே. பிரபாத் சந்திரகீர்த்தி ஆகிய நான் மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 33 (2) ஆம் பிரிவின் கீழ் பீடி உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு நாளாந்த வேலை தொடர்பாக இவ்வறிவித்தலுக்கான அட்டவணையிற் கூறப்பட்டுள்ள துண்டு வேலைக்கான ஆகக் குறைந்த சம்பள அளவு விகிதங்களை நிருணயிப்பதற்கு உத்தேசித்துள்ளேன் என அக் கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கின்றேன்.*

*மேற்கூறப்பட்ட உத்தேசத்திற்கான ஆட்சேபணைகள் 2022 ஆம் ஆண்டு 08 ஆம் மாதம் 19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிவரை சபைத் தலைவரினால் பெற்றுக்கொள்ளப்படும்.*

*அத்தகைய ஆட்சேபணை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும், அத்தகைய ஆட்சேபணை ஏந்த ஏதுக்களின் மீது செய்யப்படுகிறதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.*

**பீ. கே. பிரபாத் சந்திரகீர்த்தி,**
*தலைவர்,*
*பீடி உற்பத்தித் தொழிலுக்கான*
*சம்பளச் சபை.*

*"மெஹெவரபியெச"*
*தொழில் திணைக்களம்,*
*கொழும்பு 05,*
*2022 யூலை 27.*

**அட்டவணை**

*பீடி உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு, 1957 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 29 ஆந் திகதிய 11208 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கான அட்டவணையிற் தரப்பட்டுள்ளவையும், காலத்திற்கு காலம் வேறுபடுத்தப்பட்டுள்ளவையும், 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதிய 21383 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பின் மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டவையுமான முடிபுகள், அவ்வட்டவணையின் II ஆம் பாகத்திற்குப் பதிலாக பின்வரும் புதிய பாகத்தினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்.*

**II ஆம் பாகம்**

**துண்டு வேலைக்குரிய ஆகக் குறைந்த சம்பள விகிதங்கள்**

*(பீடி சுருட்டுவதற்குச் சுற்றிலைகளைத் தயாரித்தல், சுற்றும் இலைகளை வெட்டுதல், சுற்றிலைகளுள் "பீடிப் புகையிலையை" நிரப்புதல், பீடி சுருட்டுதல், சுருட்டிய பீடிகளைக் கட்டுதல் ஆகியன உட்பட) பீடி சுருட்டுவதற்குத் துண்டு வேலைக்குரிய கீழெல்லைச் சம்பள விகிதங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும்.*

| | ரூ. ச. |
|---|---|
| (அ) 2 அங்குலத்திற்கு மேற்படாத நீளமுள்ள 1000 பீடிகளுக்கு | 500.00 |
| (ஆ) 2 அங்குலத்திற்கு மேற்பட்ட ஆனால் 3 அங்குலத்திற்கு உட்பட்ட நீளமுள்ள 1000 பீடிகளுக்கு | 562.00 |
| (இ) 3 அங்குலத்திற்கு உட்படாத நீளமுள்ள 1000 பீடிகளுக்கு | 612.00 |

*(சுற்றிலைகளுக்குள் பீடிப் புகையிலையை நிரப்புதல், பீடி சுருட்டுதல், சுருட்டிய பீடிகளைக் கட்டுதல் ஆகியன உட்பட ஆனால் சுருட்டுவதற்குச் சுற்றிலைகளைத் தயாரித்தலும் சுற்றும் இலைகளை வெட்டுதலும் நீங்கலாக) பீடி சுருட்டுவதற்குத் துண்டு வேலைக்குரிய ஆகக் குறைந்த சம்பள விகிதங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும்.*

| | |
|---|---|
| (அ) 2 அங்குலத்திற்கு மேற்படாத நீளமுள்ள 1000 பீடிகளுக்கு | 375.00 |
| (ஆ) 2 அங்குலத்திற்கு மேற்பட்ட ஆனால் 3 அங்குலத்திற்கு உட்பட்ட நீளமுள்ள 1000 பீடிகளுக்கு | 425.00 |
| (இ) 3 அங்குலத்திற்கு உட்படாத நீளமுள்ள 1000 பீடிகளுக்கு | 468.00 |

*(சுருட்டுவதற்கு சுற்றிலைகளைத் தயாரித்தல் உட்பட) சுற்றும் இலைகளை வெட்டுவதற்குத் துண்டு வேலைக்குரிய ஆகக் குறைந்த சம்பள விகிதங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும்.*

| | |
|---|---|
| (அ) 2 அங்குலத்திற்கு மேற்படாத நீளமுள்ள 1000 பீடிகளுக்கு | 250.00 |
| (ஆ) 2 அங்குலத்திற்கு மேற்பட்ட ஆனால் 3 அங்குலத்திற்கு உட்பட்ட நீளமுள்ள 1000 பீடிகளுக்கு | 275.00 |
| (இ) 3 அங்குலத்திற்கு உட்படாத நீளமுள்ள 1000 பீடிகளுக்கு | 287.00 |

*சுருட்டிய பீடிகள் சுற்றி வட்ட நாமவிலாசம் ஒட்டுவதற்கு துண்டு வேலைக்குரிய ஆகக்குறைந்த சம்பள வீதம் 1000 பீடிகளுக்கு 62.50 ரூபாவாக இருத்தல் வேண்டும்.*

EOG *08 - 0032*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.*